பொதுப்பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

கடித (3ப) எண்.19, நாள் 10.03.2020

அனுப்புநர்
டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர்,
நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை–5 (இணைப்புடன்)

ஐயா,

பொருள்: பொதுப்பணிகள் – பொதுப்பணித் துறை– தமிழ்நாடு அமைச்சுப் பணி – காலஞ்சென்ற திரு. கே.வி.முத்து என்பவரின் மகன் திரு மு.கருணாகரன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்யப்பட்டது – அரசு அளவில் பதிவு செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. தங்கள் கடிதம் எண். எஸ் 3(4)/56626/2014, நாள் 02.06.2015 மற்றும் 27.11.2015
2. அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்2.3.2016.
3. அரசு கடித எண். 13572/பி1/2015 நாள் 17.05.2017.
4. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
5. செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், நாமக்கல் அவர்களின் செயல்முறை ஆணை எண். 271/2018/நி2.1, நாள் 30.07.2018.
6. தங்கள் கடித எண். எஸ்3(4)/56626/2014, நாள் 07.05.2019.
7. அரசுக் கடித எண்.10250/பி1/2019–1, நாள் 30.12.2019

---

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் கடிதத் தொடர்புகளின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை 1–இல் காணும் தங்கள் கடிதத்தில், பொதுப்பணித் துறையில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.கே. வி. முத்து என்பவர் 2.12.2001 அன்று இயற்கை எய்திவிட்டதைத் தொடர்ந்து அவரது வாரிசுதாரரான திரு. மு. கருணாகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டு 5.4.2013 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியேற்று பணிபுரிந்து

தி.பி.பா.

Scanned by CamScanner

Scanned by CamScanner

வருகிறார் என்றும் அவரது பணியினை 5.4.2013 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. பார்வை 2–இல் காணும் அரசாணையின் பத்திகள் (6.4) மற்றும் (6.5)–இன்படி ஆய்வு செய்து மேல்நடவடிக்கை எடுத்தும், 18 கலம் கொண்ட படிவத்தில் உள்ள குறைகளைச் சரிசெய்தும் பணிவரன்முறை குறித்த புதிய கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைக்கும்படி, பார்வை 3–இல் காணும் அரசுக் கடிதத்தில் தங்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

4. பார்வை 6–இல் காணும் தங்களது கருத்துருவில், பார்வை 2–இல் காணும் அரசாணைக்கிணங்க, திரு மு.கருணாகரனின் பணியினை வரன்முறை செய்ய விதிவிலக்கு ஏதும் இல்லாத நிலையில் தனியரின் பணியானது இளநிலை உதவியாளர் பதவியில் பார்வை 5–இல் காணும் செயற்பொறியாளரின் செயல்முறை ஆணை வாயிலாக பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளதும், தனியருக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அளிக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

5. இந்நிலையில், திரு மு.கருணாகரன், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியானது நாமக்கல், கட்டடம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் பொதுப்பணித்துறை, செயல்முறை ஆணை எண். 271/2018/நிஉ.1, நாள் 30.07.2018–இன்படி தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 05.04.2013 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்பட்டது குறித்த கருத்துரு, அரசுக் கடித எண்.19205/க்யூ1/2010–2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 3.8.2010–இன்படி அரசால் நன்கு கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, தனியரின் பணி 05.04.2013 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பார்வை–2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி வரன்முறை செய்யப்பட்டதை அரசு ஏற்றுப் பதிவு செய்கிறது என்பதனைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

6. திரு மு.கருணாகரன், இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறை செய்தது தொடர்பாக, தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

7. இந்நேர்வு தொடர்பாக பார்வை 6–இல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட அசல் ஆவணங்களில், ஏற்கனவே பார்வை 7–இல் காணும் அரசுக் கடிதத்துடன் திருப்பியனுப்பப்பட்ட கூடுதல் சான்றாவணங்கள் நீங்கலாக, ஏனைய சான்றுகள் மற்றும் சான்றாவணங்கள் இத்துடன்அசலாக தங்களுக்குத் திருப்பியனுப்பப்படுகின்றன. அவற்றைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

11.03.2020

அரசு முதன்மைச் செயலாளருக்காக

11.3.20

நகல்

திரு மு.கருணாகரன், இளநிலை உதவியாளர்,
(முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை,சென்னை–5 வழியாக)
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை– 9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

பே.மு.ந.எண். 369/1524/2013/நாள். 05.2020

உரியவருக்கு அனுப்பப்படுகிறது

நகல்:- நிஉ கிளைக்கு

செ.பொ.

Scanned by CamScanner